செய்தி வெளியீடு எண்: 541 நாள்: 12.03.2024

செய்தி வெளியீடு

**கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 05.04.2023 அன்று நடைபெற்ற 2023–2024–ஆம் நிதி ஆண்டிற்கான கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை) அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், இரையுமன்துறை மீன் இறங்குதளத்தினை தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

2.அதன்படி, கன்னியாகுமரி மாவட்டம், இரையுமன்துறை மீன் இறங்குதளத்தினை தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள ரூ.33.75 கோடி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (NABARD–RIDF) திட்டத்தின் கீழ் நிருவாக ஒப்புதல் அளித்து அரசு 11.03.2024 அன்று அரசாணை வெளியிட்டுள்ளது.

**கூடுதல் தலைமைச் செயலாளர்**
**கால்நடை பராமரிப்பு, பால்வளம்,**
**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in